**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**ஆணைக்குழுச் சுற்றறிக்கை கடித இல- 02/2023**

இல20,வார்ட் பிளேஸ்
கொழும்பு -07

01.03.2023

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள்
வளாகங்களின் முதல்வர்கள்
நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**ஆதாரமற்ற, அநாமதைய புகார்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் இடம்பெறுகின்ற விசாரணைகளை இடைநிறுத்தல் தொடர்பான பொதுவான வழிமுறைகள்/வழிகாட்டல்**

ஆணைக்குழுவானது 2022.11.17ம் திகதியன்று இடம்பெற்ற இதனுடைய 1090வது கூட்டத்தில் ஆதாரங்களை சேகரிக்கின்ற கட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ஆதாரமற்ற, அநாமதைய புகார்கள் மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிசெய்வதன் முக்கியத்துவம் தொடர்பான பொதுவான வழிமுறைகள்/வழிகாட்டலுக்கு அனுமதியளித்தது.

அதற்கமைவாக பரிந்துரைக்கப்பட்ட பொதுவான வழிமுறைகள்/வழிகாட்டல் பின்வருமாறு:

| இல | விடயம் | பின்னூட்டல் |
|---|---|---|
| 1. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவத்திற்கான நிலையத்தாலும் எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களாலும் பகிடிவதை/பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை (SGBV) தொடர்பான **அநாமதைய புகார்களை** தெரிவித்தல்/ கையாளுதல்/விசாரணை செய்தல் முறை | 1. **அநாமதைய - ஆதாரமற்ற புகார்கள்**<br>சம்பவம் தொடர்பாக புகார் செய்பவரின் அடையாளத்தை வெளிப்படுத்தாமை மற்றும் வலுவான ஆதாரத்தை முன்வைக்காது மேற்கொள்ளப்படும் புகார்களை **செயல்ப்படுத்த முடியாது** என்பதை நினைவில் கொள்ளவும்<br><br>2.**அநாமதைய- வலுவான ஆதாரமுடைய புகார்கள்**<br>சம்பவம் தொடர்பாக புகார் செய்பவரின் அடையாளத்தை வெளிப்படுத்தாது ஆனால் வலுவான ஆதாரத்தை முன்வைக்கும் புகார்களை **செயல்ப்படுத்த முடியும்** என்பதை நினைவில் கொள்ளவும் |
| 2. | விசாரணைகளை தொடர்வதற்கான ஆதாரங்களை சேகரிக்கின்ற ஆரம்ப கட்டத்திலிருந்தே **நம்பகத்தன்மையினை பேணுவதன் முக்கியத்துவம்** தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு வழிகாட்டல் | **நம்பகத்தன்மையினை பேணுவதன் முக்கியத்துவம்**<br>சம்பந்தப்பட்ட தரப்பினரின் தனியுரிமை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் அதேவேளை சூழல்/சூழ்நிலைகளை பொறுத்து தகவல்களைச் சேகரிப்பதில் பொருத்தமான அணுகுமுறைகளை பின்பற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. உதாரணமாக, பலரிடமிருந்து ஆதாரங்கள் சேகரிக்கப்படும்போது ஒட்டுமொத்த குழுக்களிடமிருந்து ஆதாரங்களைச் சேகரிப்பதற்குப் பதிலாக தனித்தனியாக தொடர்பு கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது.<br><br>மேலும் விசாரணைச் செயன்முறை முழுவதுமாகவும் சம்பவம்/விடயம்/ அல்லது விசாரணை முடிந்த பின்னரும் கூட புகார்/கள், புகார் செய்தவர்/கள் போன்றவற்றின் தனியுரிமை மற்றும் நம்பகத்தன்மை பராமரிக்கப்பட வேண்டும். |

இதற்கமைய நடவடிக்கை எடுக்கவும்.

...................................................................
சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர் /கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
3. துணைத் தலைவர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்
5. செயலாளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
7. பீடங்களின் பீடாதிபதிகள்
8. கணக்காளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதியாளர்கள்
10. உயர் கல்வி நிறுவனங்கள்/ கல்வி நிறுவனங்களின் நூலகர்கள்/ சிரேஸ்ட உதவி நூலகர்/உதவி நூலகர்
11. கல்வி நிறுவகங்கள்/ வளாகங்களின் பிரதிப் பதிவாளர்கள்/ சிரேஸ்ட உதவி பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள்
12. கல்வி நிறுவகங்கள்/ வளாகங்களின் பிரதி நிதியாளர்கள்/ சிரேஸ்ட உதவி நிதியாளர்கள்/ உதவி நிதியாளர்கள்
13. உள்ளக கணக்காய்வாளர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு மேலாளர்கள்
15. உயர் கல்வி நிறுவனங்களின் சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்
16. வர்த்தக சங்கங்களின் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர்- தலைமை அதிபதி

கோவை இல: UGC/CGEE/PO_D-01